
# WORD OF CHRIST

# கிறிஸ்துவின் வசனம்




ஆசிரியர்
சகோ. அர்ச்சுனன் M.A., A.Bs.,

வாசகர்களுக்கு,

இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்கள் இம்மாதம் கர்த்தருடைய பெரிதான கிருபையால் Postal Concession கிடைத்தது. இதன் பயனுக உங்களுக்கு தொடர்ந்து பத்திரிக்கையை அனுப்ப இயலும் இதற்காக ஜெபித்த அனைவருக்கும் நன்றி உங்கள் நண்பர்களுக்கும் இப்பத்திரிக்கையை அறிமுகம் செய்யுங்கள்.

ஆசிரிய

## கிறிஸ்துவின் சபை ஊழியர்களுக்கு ஓர் நற்செய்தி

இந்தியாவில் நீங்கள் எப்பகுதியில் ஊழியம் செய்பவர்களாய் இருந்தாலும் எங்களோடு தொடர்பு கொண்டு உங்கள் சபை செய்திகளை தெரியப்படுத்துங்கள். நாங்கள் உங்கள் சபைச் செய்திகளை எமது இதழில் இலவசமாக பிரசுரிக்க ஆவலாயிரு,க்கிறோம் உங்கள் செய்தி ஐந்து வரிகளுக்குள் இருக்க வேண்டும்.

நன்றி

தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்

II கொரி 9:15

# கிறிஸ்துவின் வசனம்
# WORD OF CHRIST

மரம் 3 பிப்ரவரி 1995 கனி 7

## அழைக்கப்பட்டவர்கள்

ஒரு மனுஷன் பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணி, அநேகரை அழைப்பித்தான். விருந்து வேளையில் தன் ஊழியக்காரனை நோக்கி நீ அழைக்கப்பட்டவர்களிடத்தில் போய், எல்லாம் ஆயுத்தமாயிருக்கிறது, வாருங்கள், என்று சொல்லென்று அவனை அனுப்பினான் லூக் 14:16-24-ல் ஆண்டவர் உணர்த்துவதை வாசிக்கின்றோம் அழைக்கப்பட்டவர்களோ அசட்டை பண்ணி ஒருவன் ஒரு வயலைக் கொண்டேன், நான் அகத்தியமாய் போய், அதைப்பார்க்கவேண்டும் என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன் என்றான். பாருங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்துக்கு அழைக்கப்பட்ட அநேகர் இன்றும் இந்த மனுஷனைப் போல் அசட்டை செய்கிறார்கள். தேவனுடைய இராஜ்ஜியத்தை விட இவ்வுலக ஆஸ்தி அவர்களுக்குப் பெரிதாக இருக்கிறது. சிலர் ஞாயிற்றுக்கிழமைகளில் சபைகுச் செல்லாமல் உலகக் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பல வேலைகளில் ஈடுபடுகின்றனர். அந்த வேலையை அல்லது பொருளை கர்த்தர் அல்லவா நமக்குக் கொடுத்தார். அவரும் அவரது அழைப்புமல்லவா முக்கியம் என்று உணராதவர்களாய் அழிந்து போகிற இந்த உலகக் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அழைப்பை அசட்டை செய்கிறார்கள். ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது. உலக ஐசுவரியம் அவர்களைப் பற்றிக் கொண்டிருக்கிறது, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் பற்றி நாம் அப் 2:45-ல் வாசிக்கும் போதும் அவர்கள் காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். இப்படிப்பட்ட கிறிஸ்தவர்களைப் போல் நாமும் கருத்தருக்காக விற்று செலவு செய்கிறவர்களாக இருக்க வேண்டும்

வேறொருவன் ஐந்தேர் மாடு கொண்டேன் அதை சோதித்து பார்க்கப்போகிறேன் என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன் என்றான். புதிதாக ஒரு பொருள் வாங்கியவுடன் அதை சோதித்துப் பார்க்க வேண்டும் என்ற ஆசையால் தேவனுடைய அழைப்பைத் தள்ளிவிட்டு உலக பொருள் மீது கவனத்தை செலுத்துகின்ற மக்கள்

அதிகம், அதிகம் சற்று சிந்திப்போம்! அதிகமான ஏர் மாடுகளை வைத்து ஓட்டின சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவைக் குறித்து I இராஜா 19:19-21ல் வாசிக்கும் போது, அவன் எலியாவின் அழைப்பை உடனே ஏற்றுக்கொண்டு ஓர் ஏர்மாடுகளைப் பிடித்து அடித்து, ஏரின் மரமுட்டுகளால் அவைகளின் இறைச்சியை சமைத்து ஜனங்களுக்குக் கொடுத்தான். அவர்கள் சாப்பிட்ட பிற்பாடு அவன் எழுந்து எலியாவுக்குப் பின் சென்று அவனுக்கு ஊழியம் செய்தான் இதல்லவா ஊழியம். தன்னுடைய பொருளையே ஊழியத்திற்காக செலவு செய்தான். நம்மில் எத்தனை பேர் இப்படிப்பட்ட ஊழியத்தை செய்கிறோம். இப்பொழுதே எலிசாவைப் போல நானும் அழைப்பை ஏற்றுக்கொண்டு உலகப்பொருளை கர்த்தருக்காக செலவுசெய்வேன் அழைப்பை ஏற்றுக்கொண்டு படவு வலைகளை விட்டு இயேசுவின் பின்னே சென்ற சீஷர்களைப் போல நானும் செல்வேன் என்று தீர்மானம் எடுங்கள்.

வேறொருவன், பெண்ணை விவாகம் பண்ணினேன் அதினால் நான் வரக்கூடாது என்றான். ஆதியிலே ஆதாமுக்கு ஏற்றதுணையை கர்த்தரல்லா உண்டாக்கினார். அவர் மனிதனுக்குத் துணையாக பெண்ணை உண்டாக்கியிருக்க இப்போது அவன் பெண்ணைவிட்டு வரக்கூடாதென்று அழைப்பை அசட்டை செய்கிறான். லோத்தினுடைய குடும்பத்தைப்பற்றி ஆதி19:17ல் வாசிக்கும்போது அவர் உன் ஜீவன் தப்ப ஓடிப்போ பின்னிட்டுப் பாராதே, இந்த சம பூமியில் எங்கும் நில்லாதே, நீ அழியாதபடிக்கு மழைக்கு ஓடிப்போ என்றார் அப்படியே தன் மனைவி தன்னோடு ஓடிவருகிறாளா இல்லையா என்பதைக் கூடப்பின்னிட்டுப் பாராமல் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தவனாக ஓடினான். ஆகையால் காக்கப்பட்டான். இது நமக்குத் திருஷ்டாந்தமாக இருக்கிறது.

தேவனுடைய இராஜ்யத்திற்கு அழைக்கப்பட்ட நாமும் அழைப்பை அசட்டை செய்யாமல் அழைப்பை ஏற்றுக் கொண்டு அதின்படி செயல்படுவோம். கர்த்தர் நம்மை வழி நடத்துவாராக!

ஆமென்

★ சபைச் செய்திகள்

1. ஜனவரி 29ம் தேதி சகோதரி கருப்பாயி கிறிஸ்துவுக்குக் கீழ் படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள்.

2. பிப்ரவரி 26ம் தேதியன்று வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் கூடுமிடத்தில் சபை விசிவாசிகளின் ஆவிக்குரிய வளர்சிக்காக நடைபெறவிருக்கும் ஆலோசனை கூட்டத்திற்காக ஜெபியுங்கள்.

3. பிப்ரவரி 9ம் தேதி காலை 9 மணியளவில் காங்கேயம் கிறிஸ்துவின் சபையார் கூடுமிடத்தில் நடைபெறவிருக்கும் Wold Video Bible College ன் First Anniversary யில் கலந்து கொண்டு பயன் பெறுங்கள்.

4. மார்ச் 13 ம் தேதி முதல் 23 ம் தேதி வரை ஈரோடு சி. எஸ். ஐ ஆசிரியர் பயிற்சி நிறுவன ஆடிட்டோரியத்தில் நடைபெறவிருக்கும் வேத வகுப்பு கூட்டங்களில் கலந்துகொண்டு பயன்பெறுங்கள்.

★ டிசம்பர் மாத வேத அறிவுப்பேட்டியில் வெற்றி பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| 1 | J. மேரி எலிசபெத் கலைவாணி | வத்தலக்குண்டு |
| 2 | S. சுந்தரி | வேலஞ்சேரி |
| 3 | S. ருத் | G. கல்லுப்பட்டி |
| 4 | A. ஸ்டெல்லா | வதிலை |
| 5 | A. மேரி Retd Teacher | வதிலை |

★ சிறுவர் வேத அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| 1 | S. கிருஷ்ணமூர்த்தி | வதிலை |
| 2 | S. செண்பகமூர்த்தி | ,, |
| 3 | R. இப்ராஹிம் | ,, |
| 4 | S. கோபி | ,, |
| 5. | ஜெயா பிரவிந்த் | ,, |
| 6 | P. ஜாஸ்மின் | வதிலை |
| 7 | S. முனியம்மாள் | ,, |
| 8 | S. மீனா | ,, |
| 9 | F. பெனிட்டா | திண்டுக்கல் |

★ ஜனவரி மாத இதழின் விடைகள்

1. ஆரோன் யாத் 7:7
2. உங்கள் இருதயமும் மத் 6:21
3. இரண்டு உபா 4:13
4. கிறிஸ்துவின் கலா 1:10
5. பாத்திரனல்ல மத் 10:37
6. பத்துவிதமான
7. பன்றிகளுக்கு
8. புளித்தமாவுக்கு
9. பேதுரு
10. பவுல். பர்னபா

★ சிறுவர் வேத அறிவுப்போட்டி விடைகள்

1. உள்ளத்தை பிலே 1:20
2. பரிசுத்த ஆவியை தீத் 3:7
3. அவரை தீத் 1:16
4. அசட்டை பண்ண தீத் 2:15
5. ஆவியுடனே பிலே 1:25

★ இம்மாத வேத அறிவுப் போட்டி

1. பொவனெர்கேஸ் என்கிற பெயரை எவர்களுக்கு இட்டார்?
2. சீரியா நாட்டிலே முதலாம் குடிமதிப்பு உண்டான போது தேசாதிபதியாயிருந்தவன் யார்?
3. அவர் செய்ய நினைக்கிறதையும், மந்தாரம் எழும்பப்போகிறதையும், எவைகள் அறியப்படுத்தும்?
4. என் அக்கிரமங்கள் என் தலைக்கு மேலாகப் பெருகிறது என்று சொல்லும் தேவ மனிதன் யார்?
5. புதிய ஏற்பாட்டு சபையில் மனித தலைவர்கள் இருந்ததாக புதிய ஏற்பாட்டில் நாம் வாசிக்கின்றோமா?
6. எவனுடைய நாட்களில் பூமி பகுக்கப்பட்டது?
7. இயேசுவின் காலெலும்புகளை முறித்தார்களா?
8. மூன்று நாள் பார்வையில்லாதவனாய் புசியாமலும் குடியாமலும் இருந்தவன் யார்?
9. மீதியானியரை ஜெயிக்க முப்பத்தீராயிரம் பேரில் எத்தனை பேரை கர்த்தர் தெறிந்துகொண்டார்?
10. ராமசேசை விட்டு புறப்பட்ட இஸ்ரவேல் புத்திரர் எத்தனை புருஷராயிருந்தார்கள்?

★ சிறுவர் வேத அறிவுப் போட்டி
(எபிரெயர் புத்தகத்திலிருந்து)

1. நிலையான …………நமக்கு இங்கே இல்லை
2. சபைக் கூடிவருதலை சிலர் விட்டுவிடுகிறது போல…………… விட்டுவிடாமல்
3. புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே……… பழமையாக்கினார்
4. அவருடைய பார்வைக்கு………… ….சிருஷ்டி ஒன்றுமில்லை
5. நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த…… …….கவனிக்க வேண்டும்

MONTHLY MAGAZINE News Paper
WORD OF CHRIST: Regd. No, 84661-92.
Registerd No TN/DDL/19

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்

ஞாயிறு காலை 9-00
புதன் மாலை 6-30

கிறிஸ்துவின் சபை
கணவாய்பட்டி ரோடு
வத்தலக்குண்டு-624202

இவ்விதழ் இலவசமாக
அனுப்பப்படுகிறது.

PRINTED MATTER

To

If undel.vered please return to:

**THE EDITOR**
WORD OF CHRIST
Post Office Box No. 5.
**Batlagundu-624202.**
S. India

Edited and publised by B. Arjunan M.A.,A.Bs. on behalf of church of Christ 2.2.63A/22 Kanavaipatti Road BTL
Printed by C. Pandiyarajan B.Sc. SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624202.